பரிசோதனைகளை இந்த மைக்ரோஸ்கோப் மூலம் ஒரு மணி நேரத்தில் பரிசோதனை செய்துவிடலாம். அந்த அளவிற்கு சக்தி வாய்ந்தது மைக்ரோஸ்கோப். அதை ஆபரேட் பண்ணுவதற்கும் இன்டர்பிரட் பண்ணுவதற்கும் உரிய ஆட்கள் இல்லை என்று கல்லூரி முதல்வர் கூறுகிறார். ஆகவே அதற்குரிய நடவடிக்கை துரிதப்படுத்தப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-10

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சமீபத்திலேதான் அந்தக் கருவி பொறுத்தப்பட்டதாக இங்கே தகவல் கொடுக்கப்பட்டிருக்கிறது. அதை அங்கே முழுமையாகப் பயன்படுத்த முடியவில்லையேயொழிய ஓரளவிற்கு அதைப் பயன்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். பயிற்சி பெற்றவர்கள் அதற்குத் தேவை. அதை உணர்ந்துதான் அரசாங்கம் ஏற்கனவே நடவடிக்கை எடுத்து இருக்கிறது. டாக்டர் மீனாட்சிசுந்தரம் அடுத்து ஆர். குருசாமி என்ற இரண்டு பேரும் இந்தப் பயிற்சிக்காக வெளிநாடு அனுப்பப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டு இருக்கிறது. அவர்கள் பயிற்சி பெற்று வந்தவுடன் இது முழுமையாகப் பயன்படுத்தப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண். 29, திரு. கே. முனிவெங்கடப்பன், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்.

29 —

அரசு மருத்துவமனையில் இரத்த சேமிப்பு நிலையம் அமைத்தல்,

*10276 —திரு. கே. முனிவெங்கடப்பன் :

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) அனைத்து மாவட்ட அரசு மருத்துவமனைகளில் குறிப்பாக கிருட்டிணகிரி வட்ட அரசு மருத்துவமனையில் இரத்த சேமிப்பு நிலையம் அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது ஏற்படுத்தப்படும் ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

1992 செப்டம்பர் 22]

(அ) தற்போது 19 (அனைத்து) மாவட்ட தலைமை அரசு மருத்துவமனைகளிலும் இரத்த சேமிப்பு நிலையங்கள் இயங்கி வருகின்றன. குறிப்பாக கிருஷ்ணகிரி வட்ட அரசு மருத்துவமனையில் இரத்த வங்கி ஏற்கனவே அனுமதிக்கப் பட்டு செயல்பட்டு வருகிறது.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. கே. முனிவெங்கடப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிருஷ்ணகிரியிலே முன்பு இயங்கிக் கொண்டு இருந்த அந்த இரத்த சேமிப்பு நிலையம் இப்போது இயங்காமல் இருக்கிறது. கிருஷ்ணகிரி பகுதியிலே அதிக மான சாலை விபத்துக்கள் ஏற்படுவதற்கு வாய்ப்பு இருக் கிறது. சாலைகள் மேடு பள்ளமாக இருக்கின்ற காரணத்தாலும், மலைகள் நிறைந்த மாவட்டமாக இருப் பதனாலும் அதிகமான விபத்துக்கள் ஏற்படுகின்றன. ஆகவே, அந்த விபத்துக்கள் ஏற்படும்போது அங்கே இரத்தம் கிடைக் காமல் பல உயிர்களை இழக்கின்ற நிலைமை ஏற்படுகின்றது. ஆகவே, இன்றைக்கு இல்லையென்று வருவோர்களுக்கெல் லாம், இல்லையெனாது வாரி வழங்கும் கண்கண்ட தெய்வமாக விளங்குகின்ற புரட்சித் தலைவி ஆட்சியிலே இரத்த சேமிப்பு நிலையம் மறுபடியும் ஏற்படுவதற்கு ஆவன செய் யப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கனவே இரத்த வங்கி அங்கே இருந்து கொண்டு இருக்கிறது. சமீபகாலத்திலே ஏற்பட்டு இருக்கின்ற பிரச்சினை நாம் பணம் கொடுத்து நபர்களைப் பிடித்து, அவர்களிடத்திலே இருந்து இந்த இரத்தத்தை சேமித்து வைப் பது என்பது முடியாத காரியம்; அது கூடாது என்று நடவடிக்கை எடுக்கப்பட்டு இருக்கிறது. காரணம், பல பிரச்சினைகள் அதிலே வருகிறது. நோயாளிகளுக்கு சுத்தமான இரத்தம் கொடுக்கப்படுவதற்கு வாய்ப்பு இல்லாமல் போகிறது என்ற காரணத்தால், யார் விரும்பி வந்து இரத்தம் கொடுக்கிறார் களோ அவர்களை மட்டும் வைத்து அந்த இரத்தம் சேமிக் கின்ற ஒரு நிலையம் ஏற்படுத்தப்பட்டு இருக்கிறது. மாண்பு மிகு உறுப்பினர் சொன்னதைப்போல அங்கு ஏதாவது குறை பாடு இருக்குமேயானால் அதை உடனடியாக நிவர்த்திப்பதற் கான நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

திரு. கே. முனிவெங்கடப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்கள் இதய தெய்வம் புரட்சித் தலைவி பிறந்த நாளிலே எங்கள் மாவட்ட மக்கள் சார்பாக அருமை மாவட்டச் செயலாளர் முனுசாமி அவர்களும் நானும் மாவட் டம் முழுவதும் இரத்த தானம் செய்வதற்கு ஏற்பாடு செய்து

அங்கே இரத்தம் பெற்றுக்கொள்வதற்கு தலைமை மாவட்ட மருத்துவமனையும், வட்ட மருத்துவமனையும் வசதி இல்லை என்ற காரணத்தினால், சென்னையிலே இருந்து மருத்துவர்களை அழைத்துச் சென்று அந்த இரத்தத்தைக் கொடுக்க வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது. அதற்கு மேலாக, கிருஷ்ண கிரியிலே இயங்கிக்கொண்டு இருக்கும் பல சமூக சேவை நிறுவனங்கள் குறிப்பாக லைன்ஸ், ரோட்டரி இந்து மிஷன் ஆஸ்பத்திரி போன்ற நிறுவனங்கள் இரத்த சேமிப்பை ஏற்படுத்த வேண்டுமென்று விரும்புகிறார்கள். ஆகவே, அந்தப் பகுதியில் இருக்கின்ற மக்கள் கொடுக்கின்ற இரத்தத்தை, அந்தப் பகுதியிலே இருக்கின்ற மக்கள் பயன்படுத்தும் வகையிலே அங்கே இரத்த சேமிப்பு நிலையத்தை ஏற்படுத்துவதற்கு உடனடியாக எங்கள் இதய தெய்வம் ஆட்சியிலே ஆவன செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

<u>மாண்புமிகு திரு. சு. முத்துசாமி :</u> மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினரும், சட்டமன்ற உறுப்பினர் திரு. முனுசாமி அவர்களும் என்னிடத்திலே பேசியபொழுது இங்கே இருந்து நாங்கள் தனியாக இதற்காக மருத்துவர்களை அனுப்பி வைத்தோம். அதில் என்ன பிரச்சினை என்று சொன்னால், எப்பொழுதாவது ஒரு முறை இப்படி ஒரு 50 பேர் 100 பேர் என்று வந்து இரத்தம் கொடுக்கிறார்கள். எனவே, அந்த நேரத்திலே அங்கே இருக்கின்ற ஸ்ட்ரெங்த் போதவில்லை. எனவே அதற்காக, இப்படி வருகிறார்கள் என்பதற்காக ஆண்டு முழுவதும் அங்கே நாம் அதற்கான நபர்களை வைத்துக் கொண்டு இருக்க முடியாது. எனவேதான் இப்படிப்பட்ட பிரச்சினைகள் சில இடங்களிலே வந்து விடுகிறது. இருந்தாலும், கிருஷ்ணகிரியைப் பொறுத்தவரை என்ன தேவையான நடவடிக்கை எடுக்க வேண்டுமோ அந்த நடவடிக்கையை நிச்சயமாக அரசாங்கம் மேற்கொள்ளும்.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> திரு. எஸ். எஸ். ராமசுப்பு.

<u>திரு. எஸ். எஸ். ராமசுப்பு :</u> மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இரத்த சேமிப்பு வங்கியில் இரத்தம் சேர்க்கும் போது சில நோய்கள், அதாவது எய்ட்ஸ் நோய் எல்லாம் இதன் மூலம் பரவுவதாக சில பத்திரிகைகள் செய்தி வெளியிடுகின்றன. அந்த இரத்த சேமிப்பு வங்கியில் அந்த இரத்தத்தை நீங்கள் எடுக்கும்போது அதை நீங்கள் சரியான முறையிலே பார்த்து, எய்ட்ஸ் நோய் எல்லாம் இல்லாமல் வைக்கப்படுவதற்கு அதற்கான நடவடிக்கை ஏதாவது எடுக்கப்பட்டு இருக்கிறதா? அந்த மாதிரி நோய்கள் வராமல் இருப்பதற்கு முன்னெச்சரி

கையாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அது சம்பந்தமாக ஏதாவது நடவடிக்கை எடுத்து இருக்கிறார்களா என்று அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-15

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுபோன்று நோய்கள், பெரும்பாலான நோய்கள் ரத்தத்தின் மூலமாக பரவுகின்றன என்ற காரணத்தால் அரசாங்கம் கண்காணிப்பாக நிறைய நடவடிக்கைகளை எடுத்திருக்கிறது. குறிப்பாக ஏற்கெனவே ரத்தத்தை கொடுத்துவிட்டு பணம் பெற்றுக் கொண்டு போவார்கள். அதற்கென்று தனியாக ஆட்கள் இருந்தார்கள். இப்போது இதை தடை செய்திருக்கிறோம். குறிப்பிட்டவர்களிடத்தில் மட்டும் ரத்தம் எடுக்கப்படுகிறது. எல்லாவிதமான டெஸ்ட்டும் செய்யப்பட்டு, அது சரியான ரத்தம் தான், எந்தவிதமான குறைபாடும் இல்லையென்று, உறுதிப்படுத்தப்பட்ட பிறகு தான் சேமிப்பு நிலையத்தில் எடுக்கிறார்கள். ரத்தம் கொடுக்கிறபோது பரிசோதித்த பிறகு தான் கொடுக்கிறார்கள். மிகக் கடுமையாக இந்த முறை கையாளப்பட்டு, எந்தத் தவறும் நடந்துவிடாமல், நோய் பரவிவிடாமல் இருப்பதற்கு இந்த அரசாங்கம் கவனமாக நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 30, திரு. கே. ஏ. மனோகரன், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

30—

ஒசூரில் திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகப் பணிமனை.

*9288—திரு. கே. ஏ. மனோகரன்:

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகப் பணிமனை ஒசூரில் திறக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது திறக்கப்படும்?

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,